

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், சுசீந்திரம் அருள்மிகு தாணுமாலய சுவாமி திருக்கோவில் மார்கழி திருவிழா நடைபெறுவதை முன்னிட்டு, துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைப்பு கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக சிறு கூட்டரங்கில் இன்று (26.12.2016) நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ. இளங்கோ உடனுள்ளார்.

செ.வெ.எண்: 911/2016 நாள்: 26.12.2016

# கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், சுசீந்திரம் அருள்மிகு தாணுமாலய சுவாமி திருக்கோயில் மார்கழி திருவிழா நடைபெறுவதை முன்னிட்டு, துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைப்பு கூட்டம் இன்று (26.12.2016) நடைபெற்றது.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், சுசீந்திரம் அருள்மிகு தாணுமாலய சுவாமி திருக்கோவில் மார்கழி திருவிழா நடைபெறுவதை முன்னிட்டு, துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைப்பு கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக சிறு கூட்டரங்கில் இன்று (26.12.2016) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

திருவிழாக் காலங்களில் வீதி உலா வரும் உற்சவ வாகனத்தில் அணிவிக்கப்படும் திருவாபரணங்களை கருவூலப்புரையிலிருந்து எடுத்து சுவாமிக்கு அணிவித்து திருவிழா முடிந்ததும் மீண்டும் கருவூலப்புரையில் வைக்கும் வரை அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் உடனிருந்து கண்காணிக்க வேண்டும் எனவும், திருவிழா காலத்தில் 02.01.2017 முதல் 11.01.2017 வரை போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்யவும், புறக்காவல் நிலையம் செயல்படவும், திருவிழாக் காலங்களில் சுவாமி மரியாதை சேவைக்கும், பாதுகாப்பிற்கும் ஆயுதம் தாங்கிய 8 காவலர்களை பணியில் அமர்த்தவும், ரத வீதிகளில் காலை, மாலை சுவாமி வீதி உலா வரும் சமயம் வாகனங்களை அனுமதிக்காமலும், தேரோட்டம் நடைபெறும் போது தேருக்கு இருபுறமும் பக்கவாட்டில் தேர் சக்கரங்களிலிருந்து 7 அடி இடைவெளி விட்டும், தேருக்கு முன்பும், பின்பும் சுமார் 25 அடி இடைவெளி இருக்குமாறும், பக்கதர்கள் எவரும் தேருக்கு அருகில் வராமல் தடுக்கவும், பாதுகாப்பு அரண் ஏற்பாடுகள் செய்ய காவல் துறையினர் விழிப்புணர்வுடன் பணியாற்ற வேண்டுமெனவும், திருவிழாக் காலங்களில் தங்குதடையின்றி மின்னழுத்தவும் குறைவின்றி சமச்சீரான மின்சாரம் வழங்கவும், சுசீந்திரம் அனைத்து தெருக்களில் உள்ள மின் விளக்குகளை எரிவதற்கும், தேரோடும் வீதிகளில் இடையூறாக உள்ள மின்கம்பிகளை தற்காலிகமாக மாற்ற மின்சார வாரியம் தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனவும், திருவிழா நடைபெறும் நாட்களில் பக்தர்களின் வசதிக்காக தேவையான சிறப்பு பேருந்துகள் இயக்க போக்குவரத்து கழகங்கள் சரியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனவும், சுசீந்திரம் தேர்வுநிலை பேரூராட்சியானது ரத வீதி மற்றும் பேருந்து நிலையம் முதல் திருக்கோவில் வரையிலான சாலையை சீர் செய்யவும், தேரோட்டத்தின் போது தேர் சமச்சீராக ஓடி, நான்கு ரத வீதிகளிலும் வலம் வரும் வகையில் ரத வீதிகளை சரி செய்யவும், தெரு வீதிகளை சுத்தமாக பராமரித்து, தற்காலிக கழிவறைகள் அமைத்து, தேவையான தண்ணீரை பீப்பாய்களில் வைக்கவும், திருவிழாக் காலங்களில் குடிநீர் தட்டுபாடின்றி கிடைக்க ஏற்பாடு செய்யவும், வெளியூரிலிருந்து வரும் சுற்றுலா பேருந்துகளை ரத வீதியில் நிறுத்த அனுமதிக்காமலும்,

தற்காலிக கடைகாரர்கள் கழிவுகளை தெப்பகுளத்தில் கொட்டுவதை தடுப்பதோடு, தெப்பகுளத்தின் கிழக்கு கரையில் தற்காலிக கடைகள் அமைக்க கூடாதபடியும், வீதிகளின் குறுக்கே விளம்பர பேனர்கள் கட்டுவதை தடை செய்யவும், சுசீந்திரம் தேர்வுநிலை பேருராட்சிகள் மூலம் தொடர்ந்து கண்காணித்து, விதிமுறைகளை மீறும்பட்சத்தில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், திருக்கோவில் தொலைபேசி மற்றும் பக்தர்களின் செல்பேசிகளை குறையின்றி இயங்க தேவையான ஏற்பாடுகளை செய்ய தொலைபேசி துறையினரையும், திருவிழாக் காலங்களில் பக்தர்களின் நன்மையை கருத்தில் கொண்டு தேவையான சுகாதார ஏற்பாடுகள் செய்வதோடு, சுத்தமான குடிநீர் வழங்குவதை உறுதி செய்ய சுகாதார துறை பணியாளர்கள் பணியாற்ற வேண்டும் எனவும், திருக்கோவிலுக்கு சொந்தமான கட்டிடத்தில் புறநோயாளிகள் சிகிச்சை பிரிவு ஒன்று தற்காலிகமாக அமைத்து, மருத்துவ அலுவலர் மற்றும் மருந்தாளுனர் மூலம் பொதுமக்களுக்கு தேவையான அவசர மருத்துவ வசதி செய்திட வேண்டும் எனவும், பொதுப்பணித் துறையினர் திருக்கோவிலுக்கு சொந்தமான மூன்று மரத்தேர்களை சோதனை செய்து தேரோட்டத்திற்கு ஏதுவாக தகுதி சான்று வழங்கிடவும், சாலைகளில் போக்குவரத்திற்கு இடையூறின்றி அலங்கார வளைவுகள் அமைக்கும் பணிகளை நெடுஞ்சாலை மற்றும் கிராமப்பணிகள் அலுவலர்கள் கண்காணிக்க வேண்டும் எனவும், பக்தர்களின் பாதுகாப்பு கருதி இரண்டு தீயணைப்பு ஊர்திகளை ஒதுக்கீடு செய்திடவும், தீயணைப்பு துறை மூலம் திருக்குளத்திற்கு படகு மற்றும் மீட்பு பணி வீரர்களை தயார்நிலையில் வைத்துக்கொள்ள வேண்டுமெனவும், திருவிழாக் காலங்களில் குறிப்பாக ரதம் உலா வரும் வீதிகளில் 10.01.2017 அன்று தேவைப்படும் இடங்களில் தற்காலிகமாக மது விற்பனை நிறுத்தி வைக்க தக்க நடவடிக்கைகள் உதவி ஆணையர்(ஆயம்) மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ.இளங்கோ, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) திரு. பொ. இராஜேந்திரன், நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ஆர்.ராஜ்குமார், இணை ஆணையர் (திருக்கோயில்கள்) திருமதி. பாரதி, இணை இயக்குநர் மருத்துவ நலபணிகள் மரு. வசந்தி, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) திரு. முத்துக்குமார், கன்னியாகுமரி துணை காவல் கண்காணிப்பாளர் திரு. வேணுகோபால், நெடுஞ்சாலைதுறை உதவி கோட்ட பொறியாளர் திருமதி. விஜயா, அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் திரு. அருளரசு, போக்குவரத்துத்துறை துணை மேலாளர் திரு. பி. கோபாலகிருஷ்ணன், உதவி ஆணையர் (ஆயம்) திரு. காளிமுத்து, பொதுப்பணித்துறை (நீர்ஆதரவு) உதவி பொறியாளர் ஆர்.வல்சன் போஸ், பொதுப்பணித்துறை (கட்டிடம்) உதவி பொறியாளர் எஸ். டானியல், தமிழ்நாடு மின்சார வாரியம் உதவி செயற்பொறியாளர் ஆர்.குமார், தீயணைப்பு மற்றும் மீட்புபணிகள் துறை நிலை அலுவலர் திரு. எஸ்.சத்தியகுமார், சுசீந்திரம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. சங்கரநாராயணன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.